# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் 13.07.2026

## முன்னிலை

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA 6468/SCIC/2024**

செல்வி.R.நளினி த/பெ.N.ராகவன் - மேல்முறையீட்டாளர்
பிளாட் எண்.2/17,
எண்.5/2, டெலிகிராப் அப்பாய் தெரு
சென்னை - 600 001.கைபேசி.7358532537.

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
காவல் துணை ஆணையாளர்
பூக்கடை காவல் மாவட்டம்
பெருநகர சென்னை காவல் ஆணையரகம்
ராஜாஜி சாலை, சென்னை-600 001.

## ஆணை

| | | |
|---|---|---|
| 1. | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **19.02.2024** |
| 2. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 28.03.2024 |
| 3. | மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 03.04.2024 |
| 4. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 26.04.2024 |
| 5. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 17.05.2024 |
| 6. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து பதில் | 21.12.2024 |
| 7. | மனுதாரரின் ஆட்சேபனை மனு | 09.01.2025 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 19/02/2024 நாளிட்ட மனுவை காவல்துறை துணை ஆணையர் அலுவலகம், சென்னை-1 அவர்களுக்கு அனுப்பி, அதில் “மனுதாரர் R.நளினி ஆகிய நான் சம்பந்தப்பட்ட பிரச்சனை பற்றிய தீர்வு குறித்து பல மனுக்களை சென்னை காவல்துறையின் தலைமை அலுவலகத்திலும், சென்னை காவல்துறை ஆணையர்

அலுவலகத்திலும், சென்னை காவல்துறை இணை ஆணையர் பூக்கடை அலுவலகத்திலும் சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் சமர்பித்திருந்தேன். இதன் சம்பந்தமாக எந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது என்ற தகவல்களையும் மனுவின் எண். வரிசைப்படி அனுப்பும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்" என்பன போன்று 3 (மூன்று) இனங்களில் தகவல்களை அளிக்கக் கோரியுள்ளார்.

2. இன்றைய (13/07/2026) ஆணையத்தின் விசாரணையின் போது மனுதாரர் செல்வி.R.நளினி த/பெ.N.ராகவன் அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். மனுதாரரின் வருகையின்மை ஆணையத்தால் பதிவு செய்யப்படுகிறது. பொது அதிகார அமைப்பின் சார்பில், திரு.S.அகமத் அப்துல் காதர். காவல் உதவி ஆணையாளர், உயர்நீதிமன்ற சரகம், சென்னை பெருநகரக் காவல் அவர்கள் தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012 விதி 8(2)-ன்படி அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியாக, நேரில் ஆஜராகி, மனுதாரரின் மனு 03/04/2024 தேதியிட்டு சட்டப்பிரிவு 6(3)-ன் கீழ் மாற்றம் செய்யப்பட்டு பொதுத் தகவல் அலுவலர்/ காவல் துணை ஆணையாளர், பூக்கடை காவல் மாவட்டம் அவர்களுக்கு வரப் பெற்றதற்கு 26/04/2024 தேதியிட்டும் மீண்டும் 21/12/2024 தேதியிட்டும் மனுதாரருக்கு தகவல் அனுப்பப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். மேலும், பொதுத் தகவல் அலுவலரின் பிரதிநிதி தெரிவிக்கையில், இவ்வழக்கு தொடர்பாக, மின்னணு வாயிலாக 30/08/2024 அன்று தொடர்புடைய நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். **ஆணையத்தின் அழைப்பாணை அனுப்பப்பட்டு, நேரடி விசாரணையில் பங்கேற்று தனது வாதுரையினை பதிவு செய்ய வாய்ப்பளிக்கப்பட்டும், இன்றைய விசாரணையில் மனுதாரர் ஆஜராகவில்லை. எனவே, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA 6468/SCIC/2024</u>**

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர் /
காவல் துணை ஆணையாளர்
பூக்கடை காவல் மாவட்டம்
பெருநகர சென்னை காவல் ஆணையரகம்
ராஜாஜி சாலை, சென்னை-600 001.

**மேல்முறையீட்டாளர்**

செல்வி.R.நளினி த/பெ.N.ராகவன் s
பிளாட் எண்.2/17,
எண்.5/2, டெலிகிராப் அப்பாய் தெரு
சென்னை - 600 001.
**கைபேசி**.7358532537.

RG/Sr.PC